
# சின்னங்களும் சிறப்புக்களும்



வெளியீடு

தேசிய ஐக்கிய முன்னணி

# சின்னங்களும் சிறப்புக்களும்

“தாருஸ்ஸலாம்”

— சாந்தி இல்ல வெளியீடு —

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# அணிந்துரை

சின்னங்களும் சிறப்புக்களும் எனும் தலைப்பில் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸ் முன்னணிப் போராளிகளுள் ஒருவருமான ஜனாப் அப்துல் மஜீத் ஆலிம் அவர்கள் எழுதிய சிறிய; ஆனாலும் அழகிய பிரசுரத்தைப் பார்த்துப் பரவசமடைந்தேன்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் மக்காவுக்கு உம்றா செய்ய பயணமான நிலையில் இஹ்ராத்தோடு இருக்கையில் என்னுள்ளே புதிய சிந்தனைகள் சுரக்கத் துவங்கின.

அது மட்டுமன்றி அமைதியிழந்து இரத்தத்தை ஓட்டிக் கொண்டிருக்கும் நமது நாட்டை; இன்ஷா அல்லாஹ்! 2012ம் ஆண்டளவில் சமாதானப் பூங்காவாக மாற்றக்கூடிய வியூகங்களும் கூட மனதில் நிழலோடத் துவங்கின.

திடீரென்றாற் போல் — கையிலே வெண்ணெய்யை வைத்துக் கொண்டு நெய்க்காக அலைபவனின் நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் இருப்பதை இறைவன் எனக்குப் புலனாக்கினான்.

“பன்றிகளின் முன் முத்துக்களை வீசாதே!” எனச் சொன்ன இயேசு நாதரின் அறிவுரையும் என்னை ஆட்கொள்ளத் துவங்கியது.

இறைவன் நமக்குத் தந்த மரச்சின்னத்தின் மூலம்; இந்த நாட்டின் பிரச்சினைகளுக்கு அமைதி கிடைத்தேயே ஆக வேண்டுமென்ற மாறாத நம்பிக்கைக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் வந்த போது எமது அரசியல் உயர்பீடத்திலிருந்த ஒவ்வொருவருடனும் தொலைபேசியில் பேசத்துவங்கினேன்.

கடந்த 12 ஆண்டுகளில் ஒரு போதும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரென்ற அடிப்படையில் அதி உயர்பீட சகோதரர்களோடு;

கூட்டங்களுக்கு வெளியே பேசுகின்ற வழக்கம் இல்லாத நிலையிலும்கூட; இந்தப் பாரம்பரிய மீறலை செய்யுமாறு இறைவனால் தூண்டப்பட்டேன்.

விளைவு அடுத்த பன்னிரண்டு மணித்தியாலங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வெற்றிச் சின்னமான விருட்சத்தைதான் தேசிய ஐக்கிய முன்னணிக்கு சந்தோசத்தோடு வழங்கும் முடிவை எமது அரசியல் அதியுயர் பீடம் எடுத்தது. அல்ஹம்துலில்லாஹ்! எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

இருப்பினும்... ஒரு சில சகோதரர்களுக்கு மத்தியில் சிந்தனைக் குழப்பம் இருந்ததை அவதானிக்கக் கூடியதாயிருந்தது. மரச்சின்னத்தை எப்படி வழங்குவதென்ற வினாவை எழுப்பினர்.

மரத்தை கைவிட்டுவிட்டு; தேசிய ஐக்கிய முன்னணியில் "புறா" சின்னத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் வர முயற்சிப்பது போலவும் சில சகோதரர்கள் பிரச்சினையை அணுகத் தொடங்கினர்.

அப்போதுதான் எமது போராட்டம் என்பது சின்னமல்ல; மாறாக தனித்துவமான புதிய தத்துவத்தின் கிளறல்கள்தாம் நமது போராட்டம் என்பதை சொல்லி விளங்க வைக்க வேண்டிய அவசியம் எற்பட்டது.

ரோஜா மலரை நாம் என்ன பெயர் கொண்டு அழைத்தாலும் அதன் தன்மை மாறுவதில்லை. இறைவனுடைய பெயரிலும் இறை தூதருடைய பெயரிலும் ஆரம்பித்த நமது போராட்டத்தை எந்த சின்னமும் மாற்றிவிட முடியாது. இருப்பினும் எமது போராட்டத்தை எமது சின்னமான மரச் சின்னத்திலேயே தொடர்ந்து கொண்டு செல்ல நாம் முடிவு செய்யும்போது யாரும் கலவரமடைய வேண்டிய அவசியமில்லை.

மரத்தின் போராட்டம் மரமாகவே தொடர்கின்றது. புறாச் சின்னத்தில் போட்டியிட்டிருந்தாலும் அது மரத்தின் போராட்டமாகவே இருந்திருக்கும். "தௌர்" குகையின் வெளியே புறாக்கள் குந்தி அன்று முட்டை இடாமல் இருந்திருந்தால் பெருமானாரின் ஆன்மீக, அரசியல், பொருளாதார விடுதலைக் குரல் அந்தக் குகைக்குள்ளேயே அன்று

அடங்கியிருக்கும். ஆனால் இறைவனின் நாட்டமோ; புறாக்களைக் கொண்டு புனித நபியின் போராட்டத்தைப் பலப்படுத்தியதாகும்.

எனவேதான் உடனடியாக சின்னங்களின் முக்கியத்துவத்தைப் பற்றியும் சின்னங்களின் முக்கியத்துவமற்ற தன்மைகள் பற்றியும் ஒரு சிறு நூல் எழுதப்பட வேண்டும் என்பதை மக்காவில் வைத்து உணர்ந்தேன். சகோதரர் எம்.பௌஸர் அவர்களுக்கு தொலைபேசியில் கட்டளைவிடுத்தேன். அவரது தலைமையில் — வழிகாட்டலில் அப்துல் மஜீத் ஆலிம் அவர்கள் இப்பணியை மிகவும் சிறப்பாக செய்து முடித்துள்ளார். அவரைத்தவிர வேறு யாரும் இப்பணியை இவ்வளவு குறுகிய காலத்தில் செய்திருக்க முடியாது. தனிமனித அதிரடி அணியாக இருந்து இதை நமக்கு அழகிய நூலாக தந்துள்ள எனதன்பு சகோதரர் எம். பௌஸருக்கு நமது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

சின்னங்களின் சிறப்புக்களை இக் கைநூல் கூறிய போதிலும் நமது போராளிகள் ஒன்றை மறந்து விடக் கூடாது. சின்னங்களும் பெயர்களும் மாறுவதல்ல முக்கியம். நமது போராட்டமும் அதன் உயிர்த்தன்மையும் எப்போதும் மாறாதிருக்கவும் நமது மரம் என்றும் இம்மண்ணில் நிலைக்கவும் எல்லோருக்கும் எப்போதும் நிழல் தரவும் தேசிய ரீதியாக சமூகங்களுக்கிடையே ஐக்கியத்தையும் சமாதானத்தையும் உருவாக்கவும் வல்ல இறைவனை எல்லா நேரமும் பிரார்த்திப்போமாக!

எம்.எச்.எம். அஷ்ரஃப்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவரும்

தேசிய ஐக்கிய முன்னணி ஸ்தாபகரும்

29.08.2000

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பது ஒரு கோட்பாடாகும். அது இலங்கை வாழ் முஸ்லிம்களின் அரசியல் சமூக வாழ்க்கையின் அசமத்துவத்தை நீக்கி, இந்த நாட்டில் வாழும் சகல சமூகங்களினதும் வாழ்வு வளம் பெறச் செய்வதற்கு உழைப்பதுடன் இந்த நாட்டில் நீண்ட காலமாய் நிலவிவரும் சமூகச் சமமற்ற தன்மையை அரசியல் ரீதியாக தகர்த்தெறிந்து ஒரு சமத்துவமிக்க மானிட சூழ்நிலையை கட்டி எழுப்புவதற்கு உதித்த அரசியல் சிந்தனையின் ஊற்றுவாயாகும். அதன் இலட்சியங்களும் கொள்கைகளும் மானிட சமூகத்தை அநியாயங்களிலிருந்து காப்பாற்றுவதும் மனிதர்களிடையே சகோதரத்துவத்தையும் சமாதானத்தையும் சமத்துவத்தையும் வலியுறுத்துவதுமாகும்.

இவ்வுன்னத சிந்தனையை காரிய சித்தமாக்கி செயல் உருப்பெறுவதற்கு ஒரு நிறுவன வடிவம் தேவைப்பட்டது. அத்தேவையை, இலங்கை முஸ்லிம்களின் நீண்ட நாளைய வேணவாவை — செயல் உருப்படுத்த எல்லாம் வல்ல இறைவன் அவனின் தூதர் எம்பெருமானார் ரசூலே கரீம் (ஸல்) அவர்களின் அருள் மாரியின் மூலம் நாடினான். அதற்கு ஒரு கருவியாக கல்முனையில் ஒரு இளம் சட்டத்தரணியாக, மனிதாபிமானமிக்க எழுத்தாளனாக, நற்குணமும் நற்சிறப்புப் பெற்ற எம்.எச்.எம். அஷ்ர·.ப் என்ற மனிதனை தேர்ந்தெடுத்தான்.

அந்த மனிதனுக்கு பக்கபலமாக இறைவனும், எம் பெருமானார் ரசூலே கரீம் (ஸல்) அவர்களும் நின்று அன்றைய மிகப்பெரும் எதிர்ப்பு சக்திகளை முறியடித்ததன் ஊடாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் ஸ்தாபனம் பலம் பொருந்திய அரசியல் நிறுவனமாக உருவாக்கம் பெற்றது.

இறைவனின் நாட்டப்படி, அவனின் கண்டுபிடிப்பின்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முகம் எது? அதன் முகவரி என்ன? அதன் முகமும் முகவரியும் இந்த எம்.எச்.எம். அஷ்ர·.ப் என்ற தனி மனிதன்தான். இலங்கை முஸ்லிம்களின் அரசியல் விடுதலை உணர்வுகளையும் அவர்களுடைய அபிலாஷைகளையும் ஒரு உடம்புக்கு ஒப்பிட்டால் அதன் உயிர் எம்.எச்.எம். அஷ்ர·.ப் அவர்கள் தான். அந்த மனிதனுக்கு பெயர் தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஜீவாத்மா எம்.எச்.எம். அஷ்ர·.ப் தான்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் அதன் முகவரியும், முகமுமான எம்.எச்.எம். அஷ்ரஃப்யையும் வேறுபடுத்தி பார்க்க முடியுமா? ஒரு போதுமே முடியாது! இதனை அனைவரும் ஏற்றுக்கொண்டு முள்ளனர். இந்த அரசியல் ரீதியான அடையாளம் இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்திற்கு கிடைத்ததன்பின் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்கள் தங்களை பெருமைப் படுத்திக் கொண்டனர், கௌரவப் படுத்திக்கொண்டனர்.

நமது முஸ்லிம்களின் வாழ்விற்கும் உரிமைக்குமாக போரிடுவதற்கும், குரல் எழுப்புவதற்கும் அஷ்ரஃப் என்ற அந்த தனித்துவ அடையாளம், அந்த பாதுகாப்பு கவசம் உள்ளது என்ற நம்பிக்கை நமது மக்களிடம் ஏற்பட்டு விட்டது. அந்த நம்பிக்கையும், அந்த முகமும், முகவரியுமான நமது தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் அல்லாஹ்வுக்கு பொருத்தமான வழியில் தன்னுடைய மனசாட்சிக்கு விசுவாசமாக முஸ்லிம்களின் விடுதலைப் பயணம் தொடங்கிய நாளில் இருந்து இக்களம்வரை அவருக்கு விதிக்கப்பட்ட பணியை செவ்வனே செய்து முடித்திருக்கின்றார். அல்ஹம்துலில்லாஹ்!

1981ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் திகதி கிழக்கில் புகழ் பூத்த காத்தான்குடியில் ஒரு அரசியல் இயக்கமாக தொடங்கப்பட்ட நாளிலிருந்து சுமார் 20 வருடங்களாக ................

அஷ்ரஃப் என்ற முகவரியால்; அடையாளத்தால்
அதன் முகம் அழகு பெற்றது.
அதன் பார்வையால் பெரும் விழிப்புப்பெற்றது.
அதன் காதால் கூர்ந்து கேட்கத் தொடங்கியது.
அதன் கரங்கள் இலங்கை வாழும் மனிதர்களை சமமாக நடத்தியது.
அதற்காக வேண்டி எழுதியது.
அதன் குரல்கள் அடக்கப்பட்ட மக்களுக்காக உரத்துப்பேசியது.
அதன் பாடல் துன்புற்ற மக்களின் ஆத்ம நாதமாக இருந்தது.
அதன் இருதயம் வற்றாத சுனையாக ஓடிக்கொண்டிருந்தது.
அதன் கால்கள் காட்டிலும், மேட்டிலும் கடும் மழையிலும், கடும் வெயிலிலும்.
அதன் கொள்கைகளை, அதன் இலட்சியங்களை
காரிய சித்தமாக்க பலம்கொண்டு நடந்தன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முகவரியும் — முகமுமான நமது தலைவர் எம்.எச்.எம். அஷ்ர∴ப் அவர்கள் முஸ்லிம் மக்களின் விடுதலை உணர்வுகளை முன்னெடுத்துச் செல்லும் தலைமைப் போராட்டத்தில் எதிர்கொண்ட இன்னல்களும் துன்பங்களும் கொஞ்சமா? அதனை வார்த்தைகளில் வடிக்க முடியுமா? இலங்கை வாழ் முஸ்லிம்களுக்காக பேசுவதற்கு அன்று யார் இருந்தனர்? அவர்கள் எல்லாம் என்ன செய்து கொண்டிருந்தனர் என்பது நமக்கு அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். அதை விடுவோம். ஆனால் அல்லாஹ்வின் நாட்டத்தினால் நமக்கு வாய்த்த இந்த விடுதலை விருட்சத்தின் நிழலில் — இந்த சமத்துவ, மனிதாபிமானமான இரக்க சிந்தை கொண்ட உள்ளத்தினால் நாம் ஆறுதலடைந்திருக்கிறோம் என்பது எவ்வளவு பெரிய உண்மை — எவ்வளவு பெரிய நிம்மதி.

எம்.எச்.எம். அஷ்ர∴ப் என்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முகவரியில் நாம் இந்த நாட்டில் சுதந்திரமாக, சுபிட்சமாக வாழமுடிந்திருக்கின்றது. நமது பல கனவுகள் மெய்ப்பட்டிருக்கின்றது. நமது இலட்சியங்களின் சில எல்லைகளைத் தொட முடிந்திருக்கின்றது. இன்னும் நாம் நீண்ட தூரம் பயணப்படவேண்டி இருக்கின்றது. ஆகவே, நமது கால்களும், நமது கண்களும், நமது குரல்களும் நமது காதுகளும் இன்னும் உறுதிப்படவேண்டி இருக்கிறது. நமது இருதயம் அகலித்து அதில் கருணையின், மனிதாபிமானத்தின், சகோதரத்துவத்தின், சுனைகள் பீறிட்டு ஓடவேண்டியிருக்கிறது. அத்தேவைக்காக நாம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் முகமும் — முகவரியும் உயிருமான நமது தலைவர் எம்.எச்.எம். அஷ்ர∴ப் அவர்களை பலப்படுத்த வேண்டியுள்ளது.

நமது சின்னம், நமது அடையாளம், நமது தலைமை எம்.எச்.எம். அஷ்ர∴ப் தான். 1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் திகதி கொழும்பு "பாஷாவிலா"வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு அரசியல் கட்சியாக பிரகடனப் படுத்தப்படும் போது நமக்கிருந்த சின்னம் நமது ஒரே தலைவர் எம்.எச்.எம். அஷ்ர∴ப் தான். அந்நேரம் நாம் வேறு எந்த சின்னத்தையும் அடையாளப் படுத்தவில்லை.

பின்வந்த ஒரு கால கட்டத்தில் கிழக்கில் நடைபெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக நமது கட்சி தேர்தல்

ஆணையாளரால் பதிவு செய்யப்படாத நிலையில், அத்தேர்தலில் போட்டியிடுவதற்காக தேர்தல் வாக்களிப்பு நியதிக்கேற்ப ஒரு தேர்தல் சின்னத்தை தேடவேண்டியேற்பட்டது. இந்நிலையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை, தராசு சின்னத்தை மனதில் வைத்துக்கொண்டு தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டது. தராசு (மீஸான்) சமத்துவத்தின், நீதி, நியாயத்தின், நேர்மையின் குறியீடு அது. அதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் சின்னமாக தராசை தேர்ந்தெடுத்தது. முதல் தடவை கட்சியை அங்கீகரிக்கக்கோரி தேர்தல் ஆணையாளரிடம் சென்ற போது எங்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தராசுச் சின்னம் அந்நேரம் ஈ.எல்.ஜே.பி. கட்சிக்கு வழங்கப்பட்டது. பின்பு இரண்டாவது முறையாக தேர்தல் ஆணையாளரிடம் கட்சியை அங்கீகரிக்கச் சென்ற போது அல்குர்ஆனை , உலகிற்கு வழிகாட்ட வந்த அற்புதமிக்க இறைமறையை மனதில் வைத்துக்கொண்டு புத்தகத்தை கட்சியின் தேர்தல் சின்னமாக தேர்தல் ஆணையாளரிடம் கேட்டோம். அச்சின்னம் லிபரல் கட்சிக்கு வழங்கப்பட்டுவிட்டதென்றார் தேர்தல் ஆணையாளர்.

இந்த நிலையில் நாம் ஏலவே நம்பிக்கொண்டிருந்த இரண்டு தேர்தல் சின்னங்களும் நமது கட்சிக்கு கிடைக்க வில்லை. நாம் எதிர்ப்பார்க்காத "கற்பனை" கூடப்பண்ணாத மரச்சின்னம்தான் நமது கட்சியின் தேர்தல் சின்னமாக தேர்தல் ஆணையாளரால் நம்மீது திணிக்கப்பட்டது. இவ்வாச்சரியமான மரச்சின்னத்தை கட்சி தானாகக் தேர்ந்தெடுக்கவில்லை. இறைவனின் நாட்டம் முஸ்லிம் மக்களின் போராட்டத்தின் சின்னமாக நமது கட்சிக்கு மரச்சின்னம் தான் என விதிக்கப்பட்டதன் விளைவாக மரச்சின்னத்தை நாம் நமது தேர்தல் சின்னமாக ஏற்றுக்கொண்டோம்.

1988 பெப்ரவரி 11ம் திகதி தேர்தல் ஆணையாளரால் நமது கட்சி அங்கீகரிக்கப்பட்ட தினத்திலிருந்து இன்றுவரை நமது தேர்தல் சின்னம் மரமாக இருந்து வந்துள்ளது. கடந்த மூன்று ஜனாதிபதி தேர்தல்களிலும் நமது கட்சித் தலைமையின் தீர்மானத்திற்கு அமைய நமது வாக்குகளை நாம் 1988ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் யானைச் சின்னத்திற்கும், 1994ம் ஆண்டு, 1999ம் ஆண்டு கதிரைச் சின்னத்திற்கும் அளித்தோம். இங்கு நமது தேர்தல் சின்னம் மாறியிருப்பதைக் காண்கின்றோம்.

இச்சந்தர்ப்பங்களில் நாங்கள் மரச்சின்னமில்லை ஆகவே வாக்களிக்கமாட்டோம் என வாளாவிருக்கவில்லை. மாறாக நமது போராட்டத்தின் அடையாளமான தலைவர் என்ன கட்டளைகளை இட்டுக் கொண்டிருந்தாரோ அதற்கமைய எமது வாக்குகளை அளித்துக் கொண்டிருந்தோம்.

இன்று என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பாருங்கள். அல்லாஹ், றசூல் சிறுபான்மை சமூகங்களின் நியாயமான போராட்டம் என்று நாங்கள் குரல் கொடுத்தவற்றை முஸ்லிம் இனவாதம் என்று சொல்லிய சக்திகளுக்கு நிரந்தரமான சவுக்கடி கொடுக்கப்பட்டுள்ளது. நமது போராட்டம் முஸ்லிம் காங்கிரஸினோடு தேசம் வென்றெடுத்த புதிய தேசியம் என்ற கோட்பாடோடும் புதுமுகத்துடனும் புதுப் பொலிவுடனும் ஏனைய சமூகங்களையும் இணைத்துக் கொண்டு புறப்படத் துவங்கியுள்ளது.

ஆனால் நமது கட்சியின் உண்மையான அடையாளமான, சின்னமான நமது தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் இன்றும் நமது நிரந்தரச் சின்னமாகவே இருந்து வருகின்றார். அவர் மாறவுமில்லை. அவர் தலைமைத்துவம் மாறவுமில்லை. மரச்சின்னத்திற்கு வாக்களிக்கும் போது பிரச்சினைகளை ஏற்படுத்தாமல் ஸ்ரீமாவோ, சந்திரிக்காவோ எனும் தேசத் தலைமைகளை ஏற்றுக் கொண்டு பொதுஜன முன்னணியில் நமது தலைவர் எவ்வித முக்கிய பதவியையும் வகிக்காத நிலையில் எம்மால் எம்முடையதல்லாத கதிரைச் சின்னத்திற்கு வாக்களிக்க முடியுமானால் மற்ற சமூகங்களும் நமது தலைவரை ஏற்றுக் கொண்டு நமது தலைவரின் தலைமையிலுள்ள தேசிய ஐக்கிய முன்னணிக்கும் இறைவன் நமக்கு தேர்தெடுத்துத்தந்த மரச்சின்னத்திற்கும் ஏன் வாக்களிக்க கூடாது? ஏன் நாம் மரச்சின்னத்திற்கும் தேசிய ஐக்கிய முன்னணிக்கும் வாக்களிக்க முடியாது?

உண்மையில் நமது கட்சி தேர்தல் ஆணையாளரால் 1988ம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமை மரச்சின்னத்தை விருப்பத்தோடு அன்று ஏற்கவில்லை. அதனுடைய தேர்வுகளாக புத்தகமும், தராசுமே இருந்தன. சரித்திரத்தில் எத்தனையோ ஆதாரங்களைப் பார்க்கின்றோம். விருப்பமில்லாத விடயங்கள்தான் —

உலக சரித்திரத்தையே மாற்றியமைத்துள்ளன. முஸ்லிம் காங்கிரஸுக்கும் நடந்தது இந்த கதை தான். நமக்கு விருப்பமில்லாத மரச்சின்னம், பலவந்தமாகத் திணிக்கப்பட்ட மரச்சின்னம் தான் இறைவனின் நாட்டத்துடன் எம்பெருமானர் ரசூலே கரீம் (ஸல்) அவர்கள் ஆசிர்வாதத்தால் இந்த நாட்டின் அரசியல் சரித்திரத்தையே மாற்றும், மாற்றிய வலிமையுடன் உங்களுடன் பேசிக் கொண்டிருக்கிறது.

மரச்சின்னத்தின் குணமோ என்னவோ தெரியாது, இலைகள் உதிர்ந்து, புதிய இலைகள் உருவாகுவதுபோன்று, உறுப்பினர்கள் உதிர்வதும் புது உறுப்பினர்கள் தோன்றி அழகூட்டுவதுமாக இருக்கின்றது. விழுதுகள் மரத்திலிருந்து பிறந்து மரத்திற்கு வலுவூட்டுகின்றது. அதனால், புதுப்புது பொலிவு பெற்ற வரலாற்று அத்தியாயங்களை இந்தக் கட்சி கண்டு வந்திருக்கிறது.

நபி ஆதம் (அலை) அவர்கள் விருப்பமில்லாத நிலையில் தான் சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். ஆனால் அந்த வெளியேற்றம்தான் உலக சரித்திரம் உருவாகி, மனித குல வரலாறு தோன்றி, நபிமார்களும், அரசர்களும், அறிஞர்களும், வள்ளல்களும் இந்த உலகில் சரித்திரம் படைப்பதற்குக் காரணமாக அமைந்தது. நபி ஆதம் (அலை) அவர்கள் சுவர்க்கத்திலேயே வாழ விரும்பியிருந்தால், அப்படி வாழ்ந்திருந்தால் இப்படியொரு மனித குல வரலாறு வந்திருக்கவே முடியாது. இறைவனை வணங்கும் நல்லடியார்களுடைய கூட்டத்தைக் உலகம் பார்த்திருக்கவே முடியாது.

இதைப் பற்றி இபுனு அஜமி (ரஹ்) என்னும் பெரியார் கூறும் பொழுது, “நான் ஆதமாக இருந்திருந்தால், தடுக்கப்பட்ட கனியை மட்டுமல்ல, அந்த மரத்தின் பட்டைகளைக் கூட வார்ந்து கடித்து விழுங்கியிருப்பேன்” என்று கூறுகிறார்கள். ஆம் தடுக்கப்பட்ட அந்தக் கனிக்குள் மனித குல வரலாற்றை அல்லாஹ் மறைத்து வைத்திருந்தான் என்பதையும் அது அந்த வல்ல இறைவனுடைய மறை முகமான ஏற்பாடாக இருந்தது என்பதையும் உணர முடிகிறது. கட்சிக்கு ஆரம்பத்தில் விருப்பமில்லாத மரச்சின்னத்துக்குள்ளும் அல்லாஹ் எத்தனையோ நாட்டங்களையும் பதித்து விட்டான் என்பதை நாம் பல அனுபவங்களின் மூலமாகப் புரிய முடிகிறது.

ஹிஜ்ரத்துக்காக நபிகளார் (ஸல்) அவர்கள் மக்காவை விட்டும் வெளியேறிய பொழுது, கஃ.பாவின் முற்றவெளியில் நின்று கொண்டு கண்ணீர் சிந்தினார்கள். மக்காவை விட்டும் வெளியேற மனமில்லாத நிலையில் வெளியேறிச் சென்றார்கள்.

அப்பொழுது வல்ல இறைவனிடமிருந்து அவர்களுக்கு கூறப்பட்டது. 'நபியே உமக்கு விருப்பமான இடத்திலிருந்து, எனக்கு விருப்பமான இடத்துக்கு உம்மை அழைத்துச் செல்கிறேன்' என்று. இப்படியொரு ஹதீஸ"டைய ரிவாயத் இருந்து கொண்டிருக்கிறது. நபிகள், மக்காவைவிட்டும் விருப்பமில்லாத நிலையில் வெளியேறிய வெளியேற்றம் தான் உலக சரித்திரத்தையே புதுப்பித்து, ஈடு இணையில்லாத ஒரு வரலாற்றைக் கொண்டு வந்தது.

தந்தை யஃ.கூப் நபி அவர்கள், மகன் யூசுப் நபி அவர்களை ஆடு மேய்க்க அனுப்பும் பொழுது விருப்பத்துடன் அனுப்பவில்லை. ஆனால் குர்ஆனிலே அழகிய சரித்திரமொன்று வல்ல இறைவன் போற்றும் அளவிற்கு (அஹ்ஸனுல் கஸஸ்) அன்னவர்களுடைய நீண்ட சரித்திரம் குர்ஆனிலே இடம் பிடித்திருக்கிறது. ஆடு மேய்க்க அனுப்பாமல் தந்தையார் மகனை வீட்டில் தடுத்து வைத்திருந்தால், 'சூறா யூசுப்' என்ற அத்தியாயத்தையே குர்ஆனிலே பார்த்திருக்க முடியாதல்லவா? யூசுப் நபியவர்கள் ஒரு நாட்டையே நிர்வகிக்கும் அளவுக்கு உயர்ந்திருக்க முடியுமா?

நபி இபுறாகீம் (அலை) அவர்கள் தாயையும், குழந்தையையும் பாரான் பாலை வனத்தில் கொண்டு வந்து தனியே விட்டது சுய விருப்பத்திலா? அல்லது மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களைக் கத்திக் கொண்டு அறுத்தது சொந்த விருப்பத்திலா? தாங்கள் விரும்பாத செயலை இறைகட்டளைக்கு அடிபணிந்து செயல் படுத்தினார்கள். அது உலக சரித்திரப் பொன்னேடாக மாறியது. இப்படி விருப்பமில்லாமல் நடந்த காரியங்கள்தான் உலகின் சரித்திரமாக மாறியிருக்கிறது.

அல்குர்ஆனில் நமது கட்சியின் சின்னமான மரத்தைப் பற்றிய நிறைய விடயங்கள் வந்த கொண்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. 'வத்தீனி' 'அத்தி மரத்தின் மீது சத்தியமாக' என்று வல்ல இறைவன் சத்தியம் செய்கின்றான். 'வத்தைத்தூனி' (ஒலிவ் எண்ணெய் எடுக்கக் கூடிய)

'சைத்தூன் மரத்தின் மீது சத்தியமாக' என்று சத்தியம் செய்கிறான் இறைவன். இந்த இடத்தில் வல்ல இறைவன் இரண்டு மரங்களை வைத்து சத்தியம் செய்து, மனிதனுடைய தன்மையையும், தரத்தையும் சுட்டிக்காட்டுகிறான்.

ஆம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் இந்த மரச்சின்னத்தை வைத்துக் கொண்டு எத்தனையோ மனிதர்களுடைய தரங்களைப் பிரித்துப் பார்த்து விட்டது. இன்னும் பார்த்துக் கொண்டிருக்கிறது. இறை நாட்டப்படிதான் எங்கள் கட்சிக்கு மரச்சின்னம் கிடைத்திருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம், உணர்ந்தோம்.

இந்தக் கட்சியின் மீது கொண்டுவந்து வைக்கப்பட்ட 'மரச் சின்னம்' வல்ல இறைவனுடைய ஒரு விசேட நாட்டத்தினால் அருளப்பட்டது என்பதை நாம் இங்கு உணருகிறோம். வல்ல இறைவனால், இந்தக் கட்சிக்கு, ஒரு மாபெரிய வேலை உருவாக்கப்பட்டுள்ளது என்பதை நாம் யூகிக்க முடிகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சி இந்த நாட்டில் உதயமாகி இருபது வருடங்களாகி விட்டது. அக்கட்சி வளர்ந்து வாலிப பருவத்தை அடைந்து விட்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆயிரமாயிரம் சாதனைகளை நிலைநாட்டி சரித்திரமாகவும் மாறிவிட்டது. வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் இதன் சரித்திர சாதனைகள் ஒளிவீசிக்கொண்டிருக்கின்றன. இந்த கட்சியை அறியாத ஒரு குழந்தை கூட இந்த நாட்டில் இல்லை. மழலை மொழி பேசும் குழந்தையிடம் கேட்டாலும் கூட இந்தக்கட்சியைப் பற்றிய நிறைய விடயங்களை சொல்லித்தரும்.

மரச்சின்னத்தை சுமந்து வந்த இந்தக் கட்சி இலட்சக்கணக்கான மக்கள் பழம் திண்ணும் மரமாக மாறிவிட்டது. ஆயிரமாயிரம் மக்கள் இம்மர நிழலில் வாழ்வு பெறும் மரமாக மலர்ந்து விட்டது. வறுமைப் பிரச்சினை, வாழ்க்கைப் பிரச்சினை, தொழில் பிரச்சினை, சமூகப் பிரச்சினை எத்தனையோ பிரச்சினைகளுக்கு தீர்வு காட்டிய கணிப்பில், முஸ்லிம் காங்கிரஸின் மரம் ஓங்கி வளர்ந்து பசுமையாகக் காட்சி தந்துக்கொண்டிருக்கிறது.

மக்கள் உள்ளங்களிலிருந்து அகற்ற முடியாத, யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத சின்னமாக இந்த மரச்சின்னம் பல இலட்சம் உள்ளங்களின் அடி ஆழத்தில் வேறூன்றிப் பதிந்து விட்டது. இந்த மரத்தை நோக்கி வந்த பயங்கர சோதனைகள் கணக்கிலடங்காதவை. வேரோடு சாய்ப்பதற்குப் போடப்பட்ட திட்டங்கள் எண்ணிலடங்காதவை, தற்பொழுதும் போடப்பட்டுக் கொண்டிருக்கும் திட்டங்களுக்கும் கணக்கேயில்லை.

கடும் புயல், பயங்கர சூறாவளி, கடும் மழை, கடும் கோடை, ஆம் இயற்கையின் எதிர் விளைவுகள் அனைத்தும் இந்த மரத்தைத் தொடர்ந்து தாக்கின. தற்பொழுதும் தாக்கிக் கொண்டேயிருக்கின்றன. அத்தனைக்கும் ஈடுகொடுத்துக் கொண்டு வரும் இந்த மரம், தன் பசுமையை இழக்காமல் தலை நிமிர்ந்து நிற்பது, இறைவனின் பேரருளினாலாகும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

இந்த மரத்தின் சில கிளைகள் தெறித்து உடைந்து விழுந்து விடுகின்றன. இலைகளெல்லாம் சில சமயம் உதிர்ந்து விடுகின்றன. இதற்காக மரம் தன் நிலையை ஒரு போதும் இழந்ததில்லை. எத்தனை கிளைகள் உடைந்தாலும், எவ்வளவு இலைகள் உதிர்ந்தாலும், இந்த மரம் மரம் தான். அது தன்னகத்தே இலைகளையும், கிளைகளையும் மறைவாக வைத்துக்கொண்டேயிருக்கிறது. இந்த மரத்தில் சில கிளைகள் உடைந்தால், நாம் கவலைப் படுவதுண்டு, ஆனால் அதை விட அழகான கிளைகள் உருவாகும் பொழுது நாம் ஆச்சரியம் படவும் தவறுவதில்லை. என்னதான் செய்ய முடியும்? மரம் என்றாலே கிளைகள் உடையத்தான் செய்யும், இலைகளும் உதிரத்தான் செய்யும். அது மரத்தின் தலைவிதி. இதற்காக மரம் ஒரு போதும் தளர்ந்து விடுவதில்லை.

தற்பொழுதும் இந்த மரத்தில் சில கிளைகள் உடைந்திருப்பது கண்டு மக்கள் கவலைப்படத் தேவையில்லை. அது பசுமையான கிளைகளைத் தரத்தான் போகின்றது. அதைக் கண்டு மக்கள் பூரிக்கத்தான் போகிறார்கள் (இன்ஷா அல்லாஹ்).

இந்த மரத்தின் எதிர்ச் சக்திகள் இந்த மரத்திலுள்ள எத்தனை கிளைகளை வேண்டுமானாலும் வெட்டலாம். மரத்தை தனி மொட்டையாக

ஆக்கலாம். ஆனால், இந்த மரம் திரும்பவும் தனது பழைய நிலையையடைவதை மனிதர்கள் யாராலும் தடுக்க முடியாது.

அதிசயம் என்னவென்றால், முஸ்லிம் காங்கிரஸின் சின்னம் மரம். அதே போன்று நமது கட்சியின் சரித்திரமும் மரத்தின் சரித்திரமாகவே அமைந்துள்ளது.

இந்த நாட்டில் ஏறக்குறைய நாற்பத்திரண்டு கட்சிகளிருக்கின்றன. இன்னும் எத்தனையோ கட்சிகள் வந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு சின்னம் இருந்து கொண்டிருக்கிறது. எமது கட்சியின் சின்னம் மரமாகும். இந்த மரத்துக்கு இருந்து கொண்டிருக்கும் ஆச்சரியமான, தெய்வீக சரித்திரப் பின்னணி, வேறு எந்தக் கட்சியினுடைய சின்னத்துக்கும் கிடையாது என்று இங்கு பெருமிதமாகக் கூறலாம். முடியுமென்றால், எந்தக் கட்சியாவது அவர்களுடைய சின்னத்தக்குரிய ஆச்சரியமான சரித்திரப் பின்னணியைக் கொண்டு வரலாம், அப்படியொரு புனைவை உருவாக்கலாம், ஆனால் உண்மையின் சார்பாக வரலாற்றிலே இவர்களால் ஒரு ஆதாரத்தைத்தானும் கொண்டுவர முடியாது.

வல்ல இறைவன் நபி ஆதம் (அலை) அவர்களையும் தாயார் ஹவ்வா (அலை) அவர்களையும் பார்த்துச் சொன்னான் — "நீங்கள் இந்த சுவனத்தில் உண்டு, அருந்தி சந்தோஷமாக வாழ்ந்திருங்கள்" என்று ஆனால், "வலாதக்றபா ஹாதிஹிஸ் சஜரத்த" . (ஒரு மரத்தை சுட்டி காட்டி) 'இந்த மரத்தின் அருகில் நெருங்கி விடாதீர்கள்' என்று தடையுத்தரவு பிறப்பித்தான்.

ஆனால், நடந்தது என்ன? நமது ஆதித் தந்தையும், தாயும் அந்த மரத்தை நெருங்கியது மட்டுமல்லாது, அதன் கனிகளையும் சாப்பிடும் அளவுக்கு வந்து விட்டார்கள்.

இறைவன் படைத்த மனிதப் படைப்பின், முதலாவது மனிதரை அளந்து பார்க்கும் ஒரு அளவு கோலாக மரம் பாவிக்கப்பட்டிருப்பதை நாம் அல்குர்ஆனின் மூலமாக அறிகிறோமல்லவா? மரத்துக்குள் எவ்வளவு பெரிய இரகசியத்தை இறைவன் மறைத்து வைத்துள்ளான்' என்பதை இங்கு நாம் உணர முடிகிறது.

நமக்குக் கிடைக்கப் பெற்ற மரச்சின்னம் இதுவரை எத்தனை பேர்களை அளந்து பார்த்து விட்டது, எத்தனை பேருடைய தரங்களைப் பிரித்துக் காட்டிவிட்டது, எத்தனை பேருடைய வாக்கு மாற்றத்தை நிரூபித்துக் காட்டிவிட்டது. ஆம் 'மரம்' என்பது, வல்ல இறைவனுடைய அற்புதச் சின்னம் என்பதை, நாம் ஏற்றுக்கொண்டு தான் ஆக வேண்டும்.

நபி நூஹ்" (அலை) அவர்கள் நிராகரிப்பாளர்களை அழிக்கும் படி இறைவனிடம் வேண்டிய பொழுது, தேக்கு மரம் நாட்டும் படி இறை உத்தரவு வந்ததாக அறிய முடிகிறது. அந்தத் தேக்கு மரங்கள் நாற்பது வருடங்களுக்குப் பிறகு வெட்டப்பட்டு அந்த மரங்களால் தான் நபி நூஹ்" (அலை) அவர்கள் கப்பல் கட்டினார்கள். நல்லவர்களை அந்த மரக்கப்பலில் ஏற்றிக் கொண்டார்கள். ஏனையவர்கள் வெள்ளத்தில் மாண்டு மடிந்தார்கள், ஆம் — இங்கே நல்லவர்களையும் கெட்டவர்களையும் பிரித்து உலக சரித்திரத்தை வெள்ளத்தால் கபளீகரம் செய்து புனர் நிர்மாணம் செய்வதற்கு வல்ல இறைவன் மரத்தையே பாவித்தான்.

ஆம் மனிதனுடைய தரத்தைப் பிரித்துக் காட்டும் ஒரு அற்புத அடையாளமாக இங்கு இறைவனால் மரம் பாவிக்கப் பட்டிருப்பதையே நாம் எமது வரலாற்றி இருந்து அறிகிறோம்.

ஒரு தடவை நபி இபுறாகீம் (அலை) அவர்கள் இறைவனிடத்தில் செல்வத்தைக் கேட்ட பொழுது, வல்ல இறைவன், அவர்களுடைய கண்ணுக்கு எட்டும் திசையெல்லாம் மரத் தோட்டங்களாக மாற்றிக் கொடுத்தான். அந்த மரத் தோட்டங்களையும் அதில் வாழ்ந்த கால் நடைகளையும், பனிரெண்டாயிரம் நாய்கள் காவல் செய்ததாக சரித்திரத்தில் வருகிறது. செல்வத்தைக் கேட்ட பொழுதும், இறைவன் நபியவர்களுக்கு மரத்தோட்டத்தையே நாடினான் என்ற இறை ஏற்பாட்டை நாம் அறிந்து வைத்திருக்கிறோம்.

இறைத் தூதர் ஸக்கரிய்யா (அலை) அவர்களை பகைவர்கள் விரட்டிக் கொண்டு சென்ற பொழுது, அந்த நபியவர்கள் நெடுந்தூரம் ஓடியும் தப்ப வழியில்லாத நிலையில் ஒரு மரத்திடம் உதவி தேடினார்கள். அந்த மரம் பிளந்தது, நபியவர்கள் அந்த மரத்தைப் பெருமிதமாக

எண்ணிக் கொண்டு அந்த மரத்துக்குள் புகுந்தார்கள். அந்த சில கணங்கள் இறையருளுதவியை அவர்கள் சற்று மறந்திருக்கலாம். அதனால், அவர்களுடைய ஆடையின் ஒரு துண்டு வெளியில் தெரியும் நிலையில் அந்த மரம் அவர்களை மூடிக்கொண்டது.

விரட்டிக் கொண்டு வந்த கொலைகாரர்கள் அந்த மரத்தைப் பார்த்த பொழுது, ஆடையில் ஒரு சிறுதுண்டு வெளியில் தெரிவதை அவதானித்தனர். உடனே அந்த மரத்தைப் பிளந்தனர். மரம் பிளக்கப்பட்டுக்கொண்டு போகும் பொழுது, நபி ஸக்கரியா (அலை) அவர்களுடைய தலையில் கத்தி இறங்கியது. அப்பொழுது நபியவர்கள் இறைவனை அழைத்தனர். அப்பொழுது இறைவனிடமிருந்து, 'இப்போதுதானா உமக்கு இறைவன் தேவைப் பட்டது? வாயை மூடிக் கொள்ளும், இல்லாவிட்டால், 'நபி' யென்ற பெயரையே பறித்துவிடுவேன்' என்று இறை அறிவித்தல் வந்தது. உடனே நபியவர்கள் தாம் இழைத்த தவறை உணர்ந்தார்கள். அதற்குள் மரம் பூரணமாக மூடப்பட்டது. நபியவர்களும் மரத்துடன் சேர்ந்து மூடப்பட்டார்கள்.

இங்கே ஒரு நபியுடைய ஒரு சிறு குறைபாட்டை நிரூபித்துக் காட்டி, உலகிலேயே அதற்குரிய தண்டனையை வழங்கி அன்னவர்களை மன்னித்து விடுவதற்கு வல்ல இறைவன் மரத்தையே பாவித்தான்.

நமது கட்சியின் வாழ்விலும் வரலாற்றிலும் நமது கட்சியின் மரச்சின்னம் எத்தனை பேர்களுடைய உள்ளங்களையும், அவர்களுடைய உள்ளங்களுக்கு உள்ளே உள்ளவைகளையும், பிளந்து காட்டிவிட்டது தெரியுமா?

நபி மூஸா (அலை) அவர்களுடைய கையிருந்த அடிகோல் ஒரு மரக்கம்புதான். அல்குர்ஆனிலே வருகிறது 'வமா தில்க்க பி யமீனிக்க யாமூசா?' 'மூஸாவே உம்முடைய வலது கையிலிருப்பது என்ன?' என்று இறைவன் கேட்க, நபியவர்கள் பதில் சொன்னர்கள் — 'கால ஹிய அஷாய' இது என்னுடைய 'அஸாகோல்' கைத்தடியாகும் என்று, அந்த மரக்கம்பிலே எழுபது விதமான அற்புதங்கள் வெளியாகிக் கொண்டிருந்தன. அந்த மரக்கம்பைக் கொண்டு பிர்அவுனுடைய அசைக்க முடியாத ராஜாங்கத்தையே அசைத்துத் தரை மட்டமாக்கி,

பிர்அவுனையும் அழித்து, அவனுடைய பதினேழு லட்சம் பேர் கொண்ட பட்டாளத்தையும் அடியோடு அழித்துப் பரலோகம் அனுப்பிவிட்டான் அல்லாஹ்.

உலக சரித்திரம் ஒரு போதும் கண்டிராத ஆச்சரிய சக்தியை ஒரு மரக்கம்பிலே இறைவன் மறைத்து வைத்திருந்தான். ஆம் மரத்துக்கும் வல்ல இறைவனுக்கும் எவ்வளவு பெரிய தொடர்பு. அந்த நபியுடைய கையிலிருந்த மரக்கம்பிலிருந்து ஆச்சரியமான இறை சக்தி வெளியாகிக் கொண்டிருந்தது. அந்தக் தடியைக் கீழே போட்டால், அது பெரும் பாம்பாக மாறிப் பெரும் படைகளையே விழுங்கி விடப்பார்த்தது.

பிர்அவுனுடைய மந்திரவாதிகளுடைய அத்தனை பாம்புகளையும் அந்த மரக்கம்பு விழுங்கி விட்டது. அந்தத் தடியினால் கல்லிலே அடித்த பொழுது, பனிரெண்டு நீரூற்றுக் கிளம்பியது. அந்தத் தடியினால் கடலில் அடித்த பொழுது, கடல் பிளந்து பனிரெண்டு பாதைகள் உருவாகின. அந்தத் தடியைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு படுத்தால் கள்வர்களை நெருங்க விடாது. அதை விரித்தால் வசதியான கட்டிலாக மாறும். அதில் ஏறி உட்கார்ந்தால், அரபிக் குதிரை போன்று பறக்கும். ஒரு முனையால் சூரிய ஒளி வரும், மறுமுனையால் சந்திர ஒளிவரும், ஒரு முனையில் வாயை வைத்தால் பால் வரும். மறு முனையில் வாயை வைத்தால் தேன் வரும். இப்படியெல்லாம் ஆச்சரியமான சக்தியை இறைவன் ஒரு மரக்கம்புக்குள் மறைத்து வைத்திருந்தானென்றால், வல்ல இறைவனுக்கும் மரத்துக்கும் உள்ள மகத்தான உறவை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படியான ஒரு சின்னம் நமது கட்சிக்கு விரும்பாமலே கிடைத்ததென்றால் அது வல்ல இறைவனுடைய ஒரு இரகசியக் கொடையென்றே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நபி மூஸா (அலை) அவர்கள் தங்கள் மனைவியாருடன் தூர்சினாய் மலைப் பள்ளத் தாக்கினூடாகப் பிரயாணம் செய்த கொண்டிருந்த பொழுது, மனைவியாருக்குப் பிரசவ வேதனை ஏற்பட்டது. அதனால் அந்த அம்மையாருக்குக் குளிர் காயநெருப்புத் தேவைப்பட்ட பொழுது, தொலைவில் கண்ணுக்குத் தெரிந்த நெருப்பு வெளிச்சத்தைக் கண்ட நபியவர்கள் 'நான் நெருப்பு எடுத்து வருகிறே'னென்று அந்த வெளிச்சத்தை நோக்கிச் சென்றார்கள்.

அங்கு சென்ற பொழுது ஒரு மரத்தின் உச்சியில் அந்த மரத்தைச் சூழ ஒரு ஆச்சரியமான ஒளி பிரகாசித்தது. அந்த ஒளி நபியவர்களுடன் 'நான் தான் உம் இறைவன்' என்று பேசியது. ஆம் நபியவர்களுக்கும், வல்ல இறைவனுக்கும் முதல் சந்திப்பு அன்றுதான் ஏற்பட்டது.

புதுமை என்னவென்றால், மூஸா நபிக்குத் தோன்றிய அந்த இறை அத்தாட்சி ஒரு மரத்தில்தான் தோன்றியது. நபி மூஸா (அலை) அவர்கள் முன், தன் அத்தாட்சியுடன் தோன்றிய வல்ல இறைவன், அதற்கும் மரத்தையே தெரிவு செய்தான். அப்படியென்றால் மரச்சின்னத்தின் புனிதத்துவமும் மகிமையும் வார்த்தைகளால் சொல்ல முடியாது!

இவ்வளவு மகிமை வாய்ந்த மரத்தின் சின்னத்தை வல்ல இறைவன் காலமெல்லாம் பாதுகாக்கப் போதுமானவன். இந்தக் கட்சிக்கு வழங்கப்பட்டுள்ள மரச்சின்னத்துக்கு நிகரான ஒரு சின்னம் இந்த நாட்டில் எந்தக் கட்சிக்கும் கிடையாது. நபி ஈஸா (அலை) அவர்களுடைய தாயார் மரியம் சித்தீக்கா (ரலி) அவர்கள் நபியவர்களைப் பெற்றெடுக்கும் நேரம் வந்த பொழுது, இறையுத்தரவு மூலம் ஒரு பேரீத்த மரத்தடிக்குத்தான் அனுப்பப்பட்டார்கள். அந்த மரத்தின் அடியில்தான் நபியவர்கள் பிறந்தார்கள். அந்த மரத்தை அசைத்தால் கனி விழும். அதைத்தான் அன்னையார் சாப்பிட்டு வந்தார்கள்.

இதே போன்று, ஏழு வானங்களுக்கும் அப்பால், நட்சத்திர மண்டலங்களுடைய கோளங்களுக்கும் அப்பால் மனித அறிவுக்கு எட்டாத தொலைவில் 'சித்ரத்தூல் முன்தஹா' என்ற ஒரு 'ஆலம்' உலகம் இருக்கின்றது. அதனுடைய விரிவையும் விசாலத்தையும் வல்ல இறைவன்தான் அறிவான் என்ற ரிவாயத் வருகின்றது.

இந்த "சித்ரத்தூல் முன்தஹா"வுடைய பிரம்மாண்டமான உலகம் ஒரு மரத்தால் சூழப் பட்டுள்ளது. அந்த மரத்தில்தான் நபிகளார் இறைவனுடைய மிகப் பெரிய அத்தாட்சியைப் பார்த்தார்கள். அல்குர்ஆன் இப்படிச் சொல்கிறது. "இன்த சித்ரத்துல் முன்தஹா" (சித்ரத்தூல் முன்தஹா என்னும் இலத்தை மரத்தின் எல்லையிலே) "இன்தஹா ஜன்னத்துல் ம..வா" அதன் சமீபத்தில்தான் நல்லடியார்கள் தங்கும் சுவர்க்கம் இருக்கின்றது. "இத் ய..ஷஸ் சித்ரத்த மாய..ஸா" (சித்ரத்தை

சூழவேண்டியது முற்றிலும் அதை சூழ்ந்து கொண்ட பொழுது) "மாதாஹல் பசரு வமா தஹா" (அவருடைய பார்வை விலகவுமில்லை, அவருடைய பார்வை கடக்கவுமில்லை.) "லகத் ரஆ மின் ஆயாத்தி ரப்பிஹில் குப்ரா" (தம்முடைய இறைவனுடைய அத்தாட்சிகளில் நின்றும் மிகப் பெரியதை அவர் பார்த்தார்".)

ஆம் நபிகளாரின் விண்னேற்றத்தின் பொழுது இடம் பெற்ற மாபெரிய நிகழ்வுகள், இந்த வசனங்களால் அல்குர்ஆனில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. அங்கு வைத்தும் நபிகளார் இறைவனுடைய அத்தாட்சிகளில் மிகப் பெரியதைப் பார்த்தது மரத்தின் மீது தான். சித்ரத்தைச் சூழ வேண்டியது முற்றிலும் அதை சூழ்ந்துகொண்ட நேரத்தில்தான் நபி அவர்கள் இறை அத்தாட்சியின் மிகப் பெரியதை அவர்கள் பார்க்கின்றார்கள்.

நபி ஈஸா (அலை) அவர்களுக்கு இறங்கிய "இஞ்ஜீல்" வேதத்தில், நபி முஹம்மத் (ஸல்) அவர்களுடைய கூட்டத்தினரின் தன்மைகளைப் பற்றி எடுத்துச் சொல்லும் வசனத்தை, அல்குர்ஆன் நமக்கு மீட்டித் தருகிறது. அந்த வசனமும் ஒரு மரத்தைத் தான் உதாரணம் காட்டுகின்றது.

"வமதலுஹும் பில் இன்ஜில்" (இன்ஜீல் அவர்களுக்குள்ள உதாரணமாவது!) "கதர்இன் அக்றஜ ஸத்அஹு பஆதரஹு பஸ்த.்.ஹ்லள பஸ்த்தவா அலா சூக்கிஹீ யு.்.ஜிபுத்துர்ராஅ"

(ஒரு பயிரை ஒத்திருக்கின்றது. அது (பசுமையாகி) கிளை விடுகின்றது. (வளர்ந்து) உறுதிப்படுகின்றது. பின்னர், அது (தடித்துக்) கனமாகின்றது. பின்னர் அது தன் தண்டின் மீது நிமிர்ந்து நிற்கிறது. விவசாயிகளை ஆச்சரியமடையச் செய்கிறது.)

"லிய.்.ஹீல பிஹிமுல் குரிப்பார்" (இவர்களைக் கொண்டு நிராகரிப்போருக்கு அவன் கோபமூட்டுவதற்காக) இந்த உதாரணங்களைஅல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்.

இங்கு ஒரு பெரிய பாடத்தை நாம் படிக்க வேண்டியுள்ளது. இஸ்லாத்தின் எதிராளிகளை கோபமூட்டுவதற்காக வல்ல இறைவன், விசுவாசிகளுடைய வளர்ச்சிப் படித்தரத்தை சுற்றிக் காட்டுவதற்காக,

ஒரு பயிரை எடுத்துக் காட்டி, அது வளர்ந்து தடித்து கிளைவிட்டு தன் தண்டின் மீது உறுதியாக நிற்பதை, அதாவது ஒரு மரத்தையே இங்கு உதாரணத்துக்குக் கொண்டு வருகிறான். மரத்தினுடைய மகிமையை அதன் பலத்தை எடுத்துக் காட்ட இதை விட என்ன ஆதாரம் தேவை?

அல்குர்ஆனில் மழையைப் பற்றிப் கூறும் இறைவன், 'அங்கும் மரத்தைத் தான்' முன் வைக்கின்றான்.

"அம்மன் கலக்கஸ்ஸமாவாத்தி வல் அர்லி வஅன் தல லக்கும் மினஸ்மாஇ மாஅ" (வானங்களையும் பூமியையும் படைத்து, மேகத்தினூடாக உங்களுக்கு மழையைப் பொழியச் செய்பவன் யார்?) "பஅன்பத்னா பிஹீ ஹதாஇக்க தாத்த பஹ்ஜா" (அதனைக் கொண்டு நாமே பெருந் தோட்டங்களை உருவாக்குகிறோம்.) "மாகான லக்கும் அன் துன்பித்தூ சஜரஹா" (நம்முடைய உதவியில்லாமல் அந்த மரங்களை உற்பத்தி செய்ய உங்களால் முடியாது.) என்று இங்கும் மரத்தைத்தான் பூமியின் மிகப் பெரிய சொத்தாக இறைவன் சுட்டிக் காட்டுகிறான். ஆம், நமது கட்சிக்குக் கிடைத்த மரச்சின்னம், நாம் விரும்பியிராத தேர்தல் ஆணையாளரால் வழங்கப்பட்ட மரச்சின்னம், வல்ல இறைவன் புறத்திலிருந்து நமக்கு வழங்கப்பட்ட மிகப் பெரிய 'அன்பளிப்பு' என்பதை அல்குர்ஆனுடைய வசனங்கள் தெளிவாக்கித் தருகிறது. இந்தக் கட்சியை இனி ஒரு போதும் அழித்துவிட முடியாது' என்ற மறை முகமான அறிவித்தலை இந்த மரச்சின்னம் தாங்கி நிற்கிறது.

தேர்தல் ஆணையாளர் நம்மோடு இரக்கப்பட்டு இந்த சின்னத்தைத் தரவில்லை. அவருக்கு எப்படி மரத்தின் மகிமை தெரியும்,? வல்ல இறைவன் இந்தக் கட்சி இனி ஒரு போதும் அழியக் கூடாது என்ற முடிவுக்கு வந்திருக்கலாம், அதன் அடையாளமாகவே இந்த மரச்சின்னம் வாய்த்தது. இல்லாவிட்டால் இந்தக் கட்சிக்கு வந்த சோதனையில் எப்போதோ இது அடையாளம் தெரியாமல் மறைந்துபோயிருக்கும். அல்லாஹ்ஹுத்தஆலா மரச்சின்னத்தின் ஊடாக நமது கட்சியை காப்பாற்றினான்.

இனி இந்தக் கட்சியை எந்த சக்தியாலும் அழிக்கமுடியாது. இந்த நாட்டின் அரசியலின் தலையெழுத்தை எழுதும் பொறுப்பு இறைவனால்

இந்தக் கட்சிக்கு வழங்கப்பட்டு விட்டது, என்பதற்கான அடையாளம் தான் இந்த மரச்சின்மாகும்.

இந்தக் கட்சி பெற்றெடுத்த ஒரு குழந்ததைதான் தேசிய ஐக்கிய முன்னணியாகும். அதை சுருக்கமாக "நுஆ" என்றும் அழைக்கிறோம். அதற்குப் புறாவுடைய சின்னம் தேர்தல் ஆணையாளரால் கிடைத்துள்ளது. இது நாட்டினுடைய சாந்தி, சமாதானத்தை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்டதாகும். இதற்கும் நிறையக் காரணங்களிருந்து கொண்டிருக்கின்றன.

நபிகளாரை "தவ்ர்" மலைக் குகையில் வைத்து பயங்கரமான உயிராபத்திலிருந்து பாதுகாப்பதில் உதவியாக இருந்ததில் புறாவும் ஒன்றாகும். அதனால், உலகில் சமாதானத்துக்கான நோபல் பரிசு புறாவுக்கும் வழங்கப்படவேண்டும். புறாவைக் கண்ணால் பார்த்தாலே உள்ளத்தில் ஒரு வித சாந்தியும் சமாதானமும் ஏற்பட்டு விடுவதை யாரும் மறுப்பதில்லை. அடுத்தது எவருக்கும், எந்த அநியாயமும் விளைவிக்காத சாந்தமான பறவை புறாவாகும். புறாவைக் கண்ணால் பார்த்தாலே போதும், உள்ளம் தன்னறியாமல் சமாதானத்தின் பக்கம் சாய்ந்து விடுவதை உணரமுடிகிறது.

இந்தப் பூமிக்கு மேலால் "சமாதானம்" என்ற வார்த்தையை உருவப்படமாக வரைந்து காட்டும்படி வேண்டினால், அந்த சமாதானப் படம் புறாவின் படமாக அமையும் என்பதை யாராவது மறுப்பார்களா? புறாவைப் பார்த்து யாராவது, "இது குழப்பச்சின்னம்" என்று சொல்வார்களா? ஆயிரம் குழந்தைகளின் மழலைப் புன்னகைகளை உரித்தெடுத்துத் தான் ஒரு புறாவை உருவாக்க முடியும் போலிருக்கிறது.

புறாவின் முகத்தையும், தோற்றத்தையும் உற்றுப் பார்க்கும் பொழுது, சுவனலோகத்தின் உள்ளேயும் இப்படியான அமைதியும், சாந்தியும் நிலவும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

சுவனலோகத்துக்குள்ளே நிலவும் சாந்தியைப் பற்றி இறைவன் அல்குர்ஆனில் குறிப்பிடுகிறான். அந்த சுவன லோகத்தின் சாந்தியை நினைத்துப் பார்ப்பதற்கு ஒரு இலட்சணமாகப் புறா விளங்கிறதல்லவா? அதனால்தானோ, என்னவோ? வல்ல இறைவன்

சுவனலோகத்தின் உள்ளே புறாவின் இறைச்சியை உணவாக வைத்திருக்கின்றான்.

"வலஹ்மி தைரின் மிம்மா யஸ்த்தஹூன்" (அவர்கள் விரும்பிய விதத்தில் பறவைகளின் இறைச்சி உணவாகக் கிடைக்கும் என்று) அல்குர்ஆன் கூறுகிறது. சுவனத்தில் புறாவுடைய இறைச்சியைத்தான் சுவனவாதிகள் விரும்பியுண்பார்கள் என்று மெஞ்ஞானிகள் கூறுகின்றனர். சுவனத்துக்குள்ளே பறவை இறைச்சியைத் தான் குர்ஆன் அறிமுகம் செய்கிறது. ஆடு மாடுகளுடைய இறைச்சியைப் பற்றி அறிமுகம் செய்வதாக நம்மால் இதுவரை அறிய முடியவில்லை. ஏனென்றால் சுவர்க்கம் நூற்றுக்கு நூறு சாந்திமயமானது. அதற்குள்ளே சாந்தியுடைய பொருள்தான் இருக்க முடியும். புறாவின் இறைச்சி சுவர்க்கத்தின் உணவாகக் காரணம், அந்தப் பறவை சாந்தியின் வடிவமாக, சாந்தியின் பத்தரை மாற்றுத் தங்கமாக இருப்பதனால்தான். புறா சாந்தியின் சின்னம் என்பதற்கு இதை விடவும் ஆதாரம் தேவையா?

இறை ஆலயமாம் கஃபத்துல்லாஹ் சாந்தியின் இடம். பாக்கியத்தின் இடம். அந்த ஆலயத்தைச் சுற்றி இறையடியார்கள் நாள் தோறும் நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கடுத்ததாக அங்கே புறாக்களுடைய கூட்டத்தைத்தான் பார்க்க முடிகிறது. அனுதினமும் அந்தப் புறாக் கூட்டங்கள் கஃபாவைச் சுற்றிவந்து கொண்டிருக்கும் காட்சி கண்களுக்குக் குளிர்ச்சியைத் தருகிறது. இறை ஆலயத்தைச் சுற்றி வாழும் பாக்கியம் புறாக்களுக்கே கிடைத்துள்ளது.

இந்தப் புறாச் சின்னத்துக்கு நிகரான ஒரு சின்னத்தை எந்தக் கட்சியும் பெற்றுக் கொள்ள வில்லை என்பது எமக்குத் தெளிவாகத் தெரியும். எமக்குக் கிடைத்த மரச் சின்னமும், புறாச் சின்னமும் இறையருளால் கிடைத்த அன்பளிப்பாகும். ஆகவே நமது இந்த அரசியல் பாதையை எந்த சக்தியாலும் மூடிவிட முடியாது. வல்ல இறைவனின் அருள் நாட்டம் இந்த சின்னங்களுக்குள் மறைந்து கிடப்பதை நாம் உணர்கிறோம்.

சரித்திரத்தில் நாம் பார்க்கிறோம் நபித் தோழர் இபுனு அப்பாஸ் (ரலி) அவர்கள் மரணித்து விட்டார்கள். அன்னவர்களுடைய ஜனாஸாவை மக்கள் குளிப்பாட்டிக் கபனிட்டு மூடிக் கொண்டிருந்த பொழுது, ஒரு புறா வேகமாகப் பறந்து வந்து கபனுக்குள் புகுந்து கொண்டது.

தேடிப்பார்த்த பொழுது, அங்கு யாருக்கும் புறாவைக் காணக்கிடைக்க வில்லை. பின்னர் அன்னவர்களுடைய ஜனாஸாவைக் கப்ரில் வைத்து, கபன் புடவையின் முகப்பக்கத்தைத் திறந்து கொண்டிருக்கும் பொழுது, அந்தப் புறா பறந்து சென்று மறைந்து விட்டது, ஆம் சாந்தியடைந்த ஆத்மாக்கள் கண்களுக்குத் தெரிவதென்றாலும் அது புறாவின் உருவில்தான் தென்படுகிறது என்பதை வரலாறு எமக்கு காட்டியுள்ளது.

இறை ஆலயமாம் கஃ.பத்துல்லாஹ்வைச் சுற்றியுள்ள ஒரு பெரும் பகுதி 'ஹரம்' என்று அழைக்கப்படுகிறது. அந்தப் பகுதியில் யுத்தங்கள் நடைபெறுவதில்லை. அதன் புனிதத்துவம் அவ்வளவு பெரியது, இந்த ஹரம் எல்லைக்குள் அப்றஹாவின் யானைப் படைகள் நுழைந்துவிட்டன. அது பெரிய பிரச்சினையாகிவிட்டது. அந்த யானைப் படைகளால் கஃ.பா ஆலயம் உடைபடப் போகிறது, மனித உயிர்கள் அழியப்போகப் போகின்றன, அந்தப் புனிதமான சாந்தியின் பூமியில் இரத்த வெள்ளம் மிதக்கப் போகின்றது. அந்த இக்கட்டான நேரத்தில் வல்ல இறைவன் அந்த சாந்தியின் புனித பூமி மாசுபடாமல் பாதுகாப்பதற்காக தனது மலக்குகளை அழைக்கவில்லை, ஜின்களை அழைக்க வில்லை மனிதர்களை அழைக்க வில்லை. ஆச்சரியமான விடயம், சாந்தியின் பூமியைப் பாதுகாப்பதற்கு இறைவன் அழைத்தது சாந்தியின் பறவைகளைத் தான். வல்ல இறைவன் பறவைகளைப் பாவித்து அந்தப் புனித பூமியின் பயங்கர இரத்த வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தினான். இந்தச் சம்பவம் அல்குர்ஆனில் அழகாக இடம் பெற்றுள்ளதைப் பாருங்கள்.
"வஅர்ஸல அலைஹிம் தைரன் அபாபீல்" (அபாபீல் என்னும் பறவைகளை அவர்கள் மீது அவன் அனுப்பினான்.)
"பிஹிஜாரத்தின் மின் சிஜ்ஜீல்" (சுட்ட கற்களைக் கொண்டு அவர்கள் மீது எறியக்கூடியவைகளாக.)

இங்கு நாம் பார்க்கின்றோம் குழப்பம் வந்து விடாமல் தடுத்து நிறுத்தி, எதிர் சக்தியை அழித்து சாந்தியை குலைக்க விடாமல் பாதுகாப்பதற்கு வல்ல இறைவன் பறவைகளையே பாவித்தான். அந்தப் பறவைகளின் பெயர் கூட அல்குர்ஆனில் இடம் பெற்று விட்டது.

ஆகவே, சாந்தியின் சின்னம் புறா, சமாதானத்தின் சின்னம் புறா. அமைதியின் சின்னம் புறா, அன்பின் சின்னம் புறா, அழகின் சின்னம்

*புறா. கண் குளிர்ச்சியின் சின்னம் புறா. நமக்குக் கிடைத்த இறை அருட்கொடைச் சின்னம் புறாப்பறவை.*

*இறைவனின் நாட்டத்தினால்தான் — ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு மரச்சின்னம் கிடைத்தது. அது வளர்ந்து விருட்சமாக கிளைப்பரப்பி மண்ணில் ஆழக் காலூன்றி வேர் பாய்ச்சி, விழுதுகள் பரப்பி நிற்கும் சமயத்தில் — அத்தலைமையின் சிந்தனையில் உதித்த தேசிய ஐக்கிய முன்னணிக்கும் அல்லாஹ் அவனுடைய சிறப்பான சின்னமொன்றையே வழங்கினான்.*

*அல்ஹம்துலில்லாஹ்!*

சின்னங்களும் பெயர்களும் மாறுவதல்ல முக்கியம்
நமது போராட்டமும் — அதன் உயிர்த் தன்மையும்
எப்போதும் மாறாதிருக்கவும்
நமது மரம் என்றும் இம்மண்ணில் நிலைக்கவும்
எல்லோருக்கும் எப்போதும் நிழல் தரவும்
தேசிய ரீதியாக — சமூகங்களிடையே
ஐக்கியத்தையும் சமாதானத்தையும்
உருவாக்கவும் வல்ல இறைவனை
எல்லா நேரமும் பிரார்த்திப்போமாக!

**எம்.எச்.எம். அஷ்ரஃப்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவரும்
தேசிய ஐக்கிய முன்னணி ஸ்தாபகரும்